## சக்தி பௌண்டேஷன் - தமிழ் CAC வகுப்பு
## Uni5 பக்த விஜயம் - 82. ஸ்ரீமான் துகாராம் மஹராஜ்

இன்று February 24, 2013

இன்று பாண்டுரங்கனின் அருளால் மஹாபக்த விஜயத்தை ஸ்ரீமான் துகாராம் மஹராஜின் சரிதத்துடன் பூர்த்தி செய்கிறோம்.

பல ஆண்டுகளுக்கும் முன் அவரைப் பற்றி 1936ல் வெளிவந்த திரைப்படம் மிகவும் ஆழ்ந்த பாவ பக்தியை அவர் மீது ஏற்படுத்தியது.

தேவரீரின் அருளால் சில மாதங்களுக்கு முன் அபங்களுக்கு எளிய மெட்டுக்கள் அமைத்ததும் இவரது அருளே.இதோ இப்போது இவரது சரிதத்தை எழுதி முடிக்கும் நிலையில் தொலைக்காட்சியில் அபங்கம் மூலம் பஜனை செய்து ராதா கல்யாணம் செய்யும் காட்சி வெளிப்படுகிறது.இவரது பூர்ண அருளால் நாம் எல்லோரும் ஜீவனாகிய ராதையை பரமபுருஷனுடன் இணைக்க முடியும்!

Uni5 பக்த விஜயத்தைப் பாண்டுரங்க அன்பர்கள் ஏற்றுக் கொண்டதன் சகுணம் இதுவாகும்.

தமிழகத்தில் ஸ்வாமி நம்மாழ்வாரின் மதிப்பும் மரியாதையும் துகாராமுக்கு வடக்கே உண்டு.இவரே பாண்டுரங்கன்!

நாம் தேவின் மறு ஜென்மம் துகாராம்.

ஆரம்பகால வாழ்க்கை

தேவநகர் என்ற மராட்டிய ஊரில் வாழ்ந்த பணக்கார தானிய வ்யாபாரி மாதவ்ராவின் மகன் துகாராம்.சிறுவயதில் வரகவியாகவும் முன் ஜென்மத்தின் கல்வி அனுபவத்தைப் பெற்றமையால் பள்ளிக்குப் போகாமலேயே தானாகவே எழுதப் படிக்கத் தெரிந்தும் கொண்டார் அவர்.

கமலா பாய் இவரது மனைவி.அவரே இவரது ஞான குரு என்று இவர் கூறுகிறார்.கணவனின் உயர்ந்த ஆன்மீக பக்தியை ஏற்றுக் கொள்ளாத புரிந்தும் புரியாத அறியாமையில் உழன்ற மனைவி இவர்.சதா கணவனையும் இறைவனையும் நிந்தனை செய்தவர்.பாவம்! பூர்வ ஜென்ம சங்கல்பத்தைப் புரிந்து கொள்ளாமல் லௌகீக இச்சைகளில் மனதை இழந்தவர்.

இவர்களுக்கு ஒரு மகளும் மகனும் உண்டு.மகனின் வம்சமே இன்றும் பாண்டுரங்கனுக்கு அபங்கம் பாடும் திவ்ய சேவையைச் செய்வதைக் காணலாம்.

ஏழ்மையை எதிர்கொள்ளத் தவிக்கும் சராசரி மனைவி கமலாபாய்.ஆனால் கணவனின் SAL ENERGY கோட்பாட்டை இவரால் உணர முடியவில்லை.

வைகுண்டம் அழைத்துச் செல்ல கருடன் வந்த போதும் அதை நம்பாதவர், ***"வைகுண்டத்திலேயே இருக்க வேண்டாம், பிள்ளைகள் தேடுவர், சீக்கிரம் வருக"*** என்று கூறும் பேதை அறியாமை மனையாள், பாவம்!

**<u>இவரது வாழ்வில் இறைவன் செய்த லீலைகள்:</u>**

* வ்யாபாரம் செய்து ஈட்டிய பொருளைத் திருடர்கள் திருட, அவற்றைக் காப்பாற்றி இவர் வடிவிலேயே அவற்றை வீட்டுக்குக் கொண்டு வந்தான் ரங்கன்.

* சோளக் கொள்ளையைக் காவல் காக்கச் சென்ற வேளை சமாதியில் ஆழ்ந்து விட, கதிர்கள் திருட்டுப் போக, வயல் முதலாளி வீட்டையே அடமானம் கேட்க, இறையருளால் மகசூல் தானியங்கள் முதலாளிக்கு அளிக்கப்பட்டன.

* வீர சிவாஜி சமர்த்த ராம்தாஸின் அறிவுரைப்படி துகாராமை தரிசித்து அவரையும் குருவாக ஏற்றுக் கொள்கிறார்.

* தன் மகனின் விஷ ஜுரத்தை அபங்கம் மூலமே குணம் செய்தார்.

* ராமேஸ்வர் ராவ் என்ற உயர்ந்த பண்டிட் முன்னிலையில் பாவபக்தி மூலம் எச்சாதியினரும் இறைவனை அடைய முடியும் என்று வாதிட்டு வென்றார் துகாராம்.

* **வேலைகள் செய்து கொண்டே இறை ஸ்மரணம் செய்வதன் மூலம் மனதை சுத்தம் செய்து அதை ஈசனிடம் லயிக்கச் செய்யும்படி மிக அழகிய எளிய கருத்துக்கள் கொண்ட பல அபங்கங்களைப் பாடினார்.**

* வீர சிவாஜி அளித்த சகல நன்கொடைகளையும் கண் மூடித் திறக்கும் முன் அவருக்கே அளித்தார்.

* தன் மீது மிகவும் மதிப்பு கொண்ட உள்ளூர் பணக்காரக் கருமியின் மனைவி, மகனின் கல்யாணத்துக்கு என அளித்த ஈயச்சொம்பைத் தங்கச்சொம்பாக ரசவாதம்

செய்தார் மஹாராஜ்.

* அபங்கம் மூலம் தன்னை சதா பாண்டுரங்க ப்ரஹ்மத்துடன் பிணைத்துக் கொண்டார்.

* இவரது அபங்கங்களை ஏற்றுக் கொள்ளாத பல புலவர்கள் அவற்றை ஏரியில் வீச மூன்றாம் நாள் அன்னை கலைவாணி அவற்றை ஏந்தி வந்து இவரிடமே சேர்த்தாள்.

* லௌகீக வாழ்க்கையில் சுகத்துக்கு எனச் செலவிடும் சக்தி அனைத்தும் விரயமே.அதை முக்திக்கு எனச் சேர்த்தார் துகாராம்.இதையே பாரதியார் பின்பற்றினார்.

* ஹரிஜனப் பெண் உருத்தியை தேவி ருக்மிணியாகவே மதித்துத் தன் மனைவியின் ஒரே சேலையையும் அவளுக்கு தானம் செய்தார் மஹாராஜ்.இதன் மூலம் அவரது மனைவிக்கு ஆடைகள் கிடைத்தன.

* பலர் காண இவரும் வைகுண்டம் சென்றார். பூத உடலுடன் வைகுண்டம் சென்றவர் இவர் ஒருவரே.அவ்விடம் தேஹுகட் ஆகும்.இது பூனேவுக்கு 12 மைல் தொலைவில் உள்ளது.

தன்னிடம் உள்ள ஞானத்தை, தெய்வீக சக்தியை முக்திக்கே பயன் படுத்த வேண்டும் என்ற உயர்ந்த விழிப்புணர்வில் வாழ்ந்து வைகுண்டம் சென்றவர் துகாராம்!

ஹரி ஓம்!